**தலைப்பு 197 – திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்ககூற்று என்பன தலைப்பு 197 இன்கீழ் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் செயலாற்றுகை என்பன தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு, சமர்ப்பிக்கப்படும் கணக்கீட்டு மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148இ 149இ 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

1.3 கணக்காய்வு விடயவெல்லை

---

தலைப்பு 197- திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள

அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

----------------------------------

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகளிலிருந்து போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.16 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 127 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதி 127 பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|---|
| **நிதி ஒழுங்குவிதிகள்** | | | |
| 127 (1)(அ) | சரியாகவும் நிதி சம்பந்தமான ஒழுங்கு நெறிப்படியும் நடைபெறுமாறு திணைக்கள நிதி சம்பந்தமான வேலைகளைத் திட்டமிட்டிருத்தல் (திணைக்களத்து நடவடிக்கைகள் நிதிக் கட்டளைகள் மற்றும் திணைக்களக் கட்டளைகளுக் கிணங்க மட்டும் நடைபெறுவதன்றி அரசாங்க அலுவல்களில் கொடுக்கல் வாங்கல்களில் எதிர்பார்க்கும் உயர்தர நேர்மையுடனும் நடைபெறுதல் வேண்டும்) | 1. பெறுகை நடைமுறையினை செயற்படுத்தல்<br>2. ஆவணங்கள் மற்றும் புத்தகங்களை பேணாமை<br>3. உள்ளக கணக்காய்வில் காணப்பட்ட குறைப்பாடுகள் | 2.4.1<br>2.13<br>2.15 |
| 127(1) (ஆ) | செலவினங்கள் மற்றும் அரசிறை சேகரிப்புகள் தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் ஒரு முறையை தயாரித்திருத்தல். | 1. இணங்கியொழுகாமை<br>2. மனிதவள முகாமைத்துவத்தில் குறைப்பாடுகள் | 2.14<br>2.16 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் யாவும், அவர் தனக்கே | 1. வாகன உபயோகத்தில் குறைப்பாடுகள் | 2.5 (அ) |

| | | | |
|---|---|---|---|
| | உரியதான நிருவாக அனுபவத்தையும் பகுத்தாய்வு அறிவினையும்கொண்டு அவற்றில் பிரயோகிப்பதற்கென அவருக்கு விடப்படும் முறையினை ஏற்பாடு செய்திருத்தல். | 2. கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல் | 2.5(ஊ) |
| 127(4) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தராலும் முறையே சமர்ப்பிக்கப்பட்டு அவற்றில் அவர் கையொப்பமிட முன்னர் அமைச்சில் பரிசோதிக்கப்படுகின்றன் மதீப்பீடுகளிலும் உண்மையான செலவுகளிலும் ஏற்பட்டுள்ள முக்கியமான வேறுபாடுகளை நுட்பமாய் அவரால் ஆராயப்படுகின்றன. | 1. வருடாந்த வரவு செலவு எல்லைகளை கடந்து பொறுப்புகளை மேற்கொள்ளுதல் | 2.6 |
| | | 2. பொது வைப்புக் கணக்கின் குறைப்பாடுகள் | 2.12 |
| 127(5) | திணைக்களங்களின் ஒதுக்கீடுகளுக்கும் செலவுகளுக்குமுள்ள முக்கியமான வேறுபாடுகளும் அமைச்சில் நுட்பமாய் பரிசோதிக்கப்படுகின்றன. | ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை உபயோகிக்கப்படாமை | 2.9 (i) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்றிருக்கும் அரசிறை அல்லது பிற அரசாங்க வருமானங்களைச் சேகரித்தல் அமைச்சினால் மிக நுணுக்கமாக கவனிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன. | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள குறைப்பாடுகள் | 2.11 |

| | | | |
|---|---|---|---|
| 127(7) | உத்தியோகத்தர்களது.∵. பணியாளர்களது தாமதம், கவனையீனம், தவறு மற்றும் மோசடி காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்படும் இழப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 103 தொடக்கம் 108 வரையிலான ஒழுங்குவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிக் கோவையை கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் கடைபிடிக்கப்பட்டு நிதி ஒழங்குவிதிகள் 156(1) இன் பிரகாரம் அத்தகைய இழப்புகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்.∵.பணியாளர்கள் மீது மிகை விதிப்பு விதிப்பதற்கும், பொறுப்பு கூறுவதற்கு எற்பாடுகள் அளிக்கப்பட்டிருப்பின் தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளிலிருந்து கணக்கீட்டு அலுவலர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அரசாங்க கணக்குக் குழுவுக்கு முன் தோன்றி தான் பொறுப்பாகவுள்ள திணைக்களக் கணக்குகளை தனது கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் சேர்ந்து விளக்கமளித்து, அவை முறையானவை எனவும் எடுத்துரைத்து அக்குழுவிற்கு உதவி செய்தலும் அவருடைய கடமையாகும். | நிதி முறைகேடுகள் தன்மையிலான கொடுக்கல்வாங்கல் | 2.7 |

2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

2.1 திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் பிரதான கடமைப் பொறுப்புகள்

(அ) திறன் அபிவிருத்தி மற்றம் தொழில்சார் பயிற்சி துறைகளுக்கு ஏற்புடையதான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்கள் தயாரிப்பு, பின்னாய்வு மற்றும் மதிப்பிடல்.

(ஆ) பாடசாலை கல்வி முடித்துள்ளவர்களுக்கும் பல்கலைக்கழக கல்வி பொருட்டு தகைமைகள் பெறாத மாணவர்களுக்கும் பயனுள்ள வேலைவாய்ப்புகளை அடிப்படையாகக்கொண்ட, கைத்தொழில், தொழில்சார் கல்வி வாய்ப்புகளை விரிவாக்கி கொள்வதற்கு முடியுமானவாறு கொள்கைகளை தயாரித்தல் மற்றும் வசதிகளை அளித்தல்.

(இ) தொழில் சந்தையில் ஏற்படும் மாற்றங்களின் தேவைக்கமைவாக திறனுடன் கூடிய பரிபூரணமான தொழிற் படையினை உருவாக்குவதற்கு கைத்தொழில், தொழில்நுட்பம் மற்றும் தொழில்சார் கல்வி என்பவற்றை நவீனமயப்படுத்தல்

(ஈ) பயிலுநர் பயிற்சி வாய்ப்புகளை மேம்படுத்தவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்

(உ) தொழில்சார் கல்வி பொருட்டான செல்நெறியினை அதிகரிப்பதற்கான முறைமைகளை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(ஊ) நியதிச்சட்ட நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ள எல்லா விடயங்களுக்கும் ஏற்புடையதான அலுவல்களை மேற்பார்வையிடல் மற்றும் பின்னாய்வு செய்தல்.

(எ) அரச தனியார் தொடர்பினை பலப்படுத்தல்.

(ஏ) தொழில்முயற்சி ஆற்றல்களை அபிவிருத்தி செய்தல்

2.2 செயலாற்றுகை

--------------------

2.2.1 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

-------------------------------------------------------------

திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின்கீழ் உள்ள 07 நிறுவனங்களுகளுடன் இணைந்து, நாடு முழுவதும் இயங்கும் 367 நிறுவனங்களுக்கு ஏற்புடையதான செயலாற்றுகை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹ 1 தொழில்சார் பயிற்சி பாடநெறிகளில் தரத்தினை மேம்படுத்தப்படாமை

அமைச்சின்கீழ் இயங்கும் பயிற்சி நிலையங்களில் நடாத்தப்படும் 4,147 பாடநெறிகளில் 1513 பாடநெறிகள் 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்வி சட்டத்தின் பிரகாரம் பிரபல்யப்படுத்தியிருக்கவில்லை. பாடநெறிகளின் பொருட்டு தேவையான பயிற்சி உபகரணங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியடயாமை, இரசாயனகூடங்கள் உரியவாறு நிருமாணிக்கப்படாமை காரணமாக மாணவர்களுக்கு தரத்துடன்கூடிய பாடநெறிகளை வழங்குவதற்கான ஆற்றல் குறைந்திருந்தது.

(ஆ) பயிற்சி பாடநெறிகளின் பொருட்டு மாணவர்களின் பங்களிப்பு எண்ணிக்கை ரீதியாக குறைந்திருத்தல்

அமைச்சின்கீழ் உள்ள பயிற்சி நிலையங்களில் 05 மாணவர்களுக்கு குறைந்த எண்ணிக்கையில் இருந்தோர்களுக்கு 118 பாடநெறிகளும், மாணவர்கள் 06-10 ஆன எண்ணிக்கையில் இருந்தோர்களுக்கு 273 பாடநெறிகளும் உள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன், 15 மாணவர்களுக்கு குறைந்த எண்ணிக்கையில் இருந்தோர்களுக்கு 612 பாடநெறிகளும் காணப்பட்டன. அதிகளவிலான மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான சகல வளங்களும் வசதிகளும் ஏற்பாடு செய்திருப்பினும், அந்த வளங்களை வினைத்திறனுடனும் விளைத்திறனுடனும் பயன்படுத்தியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) கல்விசார் பதவியினரின் வெற்றிடங்களை குறைத்தல் மற்றும் ஆலோசகர்களை பயிற்றுவித்தல்

தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் தரத்தினை விருத்தி செய்வதற்கு முடியுமானவாறு கல்விசார் பதவியினரை ஆட்சேர்ப்புச் செய்தல், கற்பித்தல்களில் தரத்தினை

மேம்படுத்துவதற்கு விடய துறைக்கு ஏற்புடையதாக போதியளவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுதல் வேண்டுமாயினும், அமைச்சின்கீழ் உள்ள 367 தொழில்சார் பயிற்சி நிலையங்களில் பேணிச் செல்கின்ற பாடநெறிகளுக்கு அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. அதனடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் 109,632 இற்கு அண்மித்த மாணவர்கள் எண்ணிக்கையினரை (தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம் மற்றும் தேசிய வியாபார முகாமைத்துவ கல்லூரி தவிர்ந்த) ஆட்சேர்ப்புச் செய்திருப்பினும், அந்த மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு தேவையான பயிற்றுவிப்பாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், சில நிலையங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரில் 752 விரிவுரையாளர்களின் பற்றாக்குறை நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) தொழில்சார் பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக சமூகத்தை அறிவுறுத்தப்படாமை

தொழில்சார் கல்வியின் பொருட்டு செல்நெறிகளை அதிகரிப்பதற்கான தந்திரோபாயங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் அமைச்சின் பணியாகும். பாடநெறிகளின்மீது மாணவர்களை கவரச் செய்வதற்கான முறையான நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(உ) பாடநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்கள் தொடர்பாக பின்னாய்வுகளை மேற்கொள்ளப்படாமை

அமைச்சின்கீழ் நடைமுறைப்படும் பெரும்பாலான பயிற்சி நிலையங்களில் தொழில்சார் பயிற்சி முடிவுறுத்திய பயிற்சி பெறுநர்கள், தொழில்களில் ஈடுபடுதல் தொடர்பான பின்னாய்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. அதேபோன்று பயிற்சிபெறுநர்கள் தொழில்களில் ஈடுபடுதல் தொடர்பான தரவு முறைமை இல்லாமை காரணமாக, தற்போது நடாத்தப்படும் பாடநெறிகள் தொழில் சூழலுக்கு ஏற்புடையதா? என்பதை கண்டறிந்து, தேவையான நவீனமயப்படுத்தல் பற்றி மதிப்பிடுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திருக்கவில்லை. அதேபோன்று அரச மட்டத்தில் தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையிலான ஒருங்கிணைப்பு, அரச தனியார் கூட்டாண்மை ( ) வாய்ப்புகளை அடையாளம் காணப்பட்டு, மாணவர்களை வேலை வாய்ப்புகளில் ஈடுபடுத்தல், சுய தொழில் வாய்ப்புகளுக்கு பங்களிப்பு வழங்குதல் தொடர்பில் முறையான நிகழ்ச்சித்திட்டம்மீது அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

2.3 நடைமுறைப்படுத்தியிருந்த வெளிநாட்டு நன்கொடை கருத்திட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்விற்கான ஆண்டில் அமைச்சினால் 02 வெளிநாட்டு கருத்திட்டங்களின் பொருட்டு மொத்தமாக 2733.49 மில்லியன் ரூபாவிலான ஏற்பாடுகள் அளிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 1564.76 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 1168.73 மில்லியன் ரூபாவை அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு 42.7 ஆன ஒதுக்கீடுகள் எஞ்சியிருந்தது. விபரங்கள் பின்வருமாறாகும்.

| கருத்திட்டத்தின் வகை | கருத்திட்டத்தின் பெயர் | கருத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் | ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடு | உபயோகம் | மீதி |
|---|---|---|---|---|---|
| | | | ரூ.மி | ரூ.மி | ரூ.மி |
| வெளிநாட்டு | கொழும்பு தொழில்சார் பயிற்சி நிலையம் நிருமாணித்தல் மற்றும் கம்பகா தொழில்நுட்ப கல்லூரி என்பன மேம்படுத்தும் கருத்திட்டம் | கொழும்பு மற்றும் கம்பகா 02 தொழில்சார் பயிற்சி நிலையங்களை தாபித்தல், மேம்படுத்தல், தொழில்நுட்ப மாற்றுதல்கள், பொருளாதார அபிவிருத்தியில் கொரியா நாட்டு நிபுணர்களின் உதவியுடன் தைக்தொழில் விருத்திக்கு ஒத்தாசை வழங்குதல் மற்றும் மனித வள அபிவிருத்தியில் பிரதான கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுதல் | 620.0 | 285.16 | 334/84 |
| வெளிநாடு | திறன் மற்றும் துறை சாரந்த அபிவிருத்தி பிரிவு | நாட்டில் கைத்தொழிலுக்கான தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி துறையில் கொள்கையுடனான கட்டமைவு முறையிலான சீரமைப்புடன் கூடிய அணுகுமுறை, ஏற்புடமை, தரம் மற்றும் சந்தைப்படுத்தலை மேம்படுத்தல் | 2,113.49 | 1,279.60 | |

2.4 பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்

அமைச்சினால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல்படி நடவடிக்கை மேற்கொண்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக 861.4 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 325.59 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடை மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

2.4.1 பெறுகை செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தல்

---

சிற்றுண்டிச்சாலை, பாதுகாப்பு மற்றும் துப்பரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல்

---

(அ) அமைச்சின் சிற்றண்டிச்சாலை, பாதுகாப்பு மற்றும் துப்பரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்கு ஏற்புடையதாக 2016/2017 இற்கு மும்மொழிகளிலும் பெறுகைக்கான அறிவிப்புகள் வெளியிடுவதற்கு 2016 ஆம் ஆண்டு மே மாதம் ரூபா.160,080 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டு யூன் 22 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானங்களின்படி, சமர்ப்பிக்கப்பட்ட விலை கூறுபவர்களில் மேற்படி பாதுகாப்பு மற்றும் துப்பரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்கு பொருத்தமான நிறுவனங்களை தெரிவு செய்வதற்கு முடியாது போனமையால், மீண்டும் 03 மாத காலப் பகுதிக்குள் புதிய விலை கேள்விகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்படி விலை கேள்விகளுக்கு ஏற்புடையதாக பெறுகை குழுவின் தீர்மானம் மற்றும் சிற்றுண்டிச்சாலை பேணிச் செல்வதற்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற்ற விலை கேள்விகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தியதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) 2017 ஆண்டுக்கு ஏற்புடையதாக 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரூபா.115,000 செலவிடப்பட்டு மீண்டும் விலை கேள்வி மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்போது 2016 ஆம் ஆண்டு திசெம்பர் 19 ஆந் திகதிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானம்படி, அடிப்படை விலை கேள்வி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமை காரணமாக சிற்றுண்டிச்சாலை பேணிச்செல்வதற்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற்ற விலைகேள்விகள் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு சனவரி 30 அந் திகதிய அமைச்சு பெறுகை குழுமூலம் மீண்டும் 03 மாத காலப்பகுதிக்குள் விலை கேள்வி மேற்கொள்வதற்கும், ரூபா. 50,000 வரை சிற்றுண்டிச்சாலையின் வாடகையை அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும் மேற்படி தீர்மானங்களின்படி செயலாற்றப்படவில்லையென்பதுடன், பாதுகாப்பு மற்றும் துப்பரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற்ற விலை கேள்விகளை மதிப்பீட்டுக்கு உட்படுத்தியதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் மேற்படி இரண்டு சந்தர்ப்பங்களிலும் பெறுகை அறிவிப்புகளை வெளியிடுவதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(இ) பெறுகை குழுவின் தீர்மானம்படி 03 மாத காலப்பகுதிக்குள் விலை கேள்வி மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், 2018∴2019 ஆகிய இரண்டு வருடங்களின் பொருட்டு பொருத்தமான சேவை வழங்குநர்களை தெரிவு செய்வதற்கு ஏற்புடையதாக 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விலை கேள்வி மேற்கொள்ளப்பட்டிருந்தது. பெறுகை அறிவிப்பு வெளியிடுவதற்கு ரூபா. 137,252 செலவிடப்பட்டிருந்ததுடன், இதன்போது பாதுகாப்பு மற்றும் துப்பரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்கு வழங்குநர்களை தெரிவு செய்திருப்பினும். சிற்றுண்டிச்சாலையின் பொருட்டு தெரிவு செய்த வழங்குநர் அமைச்சுடன் தொடர்புடைய ஊழியராவதால் பெறுகை வழங்காதிருப்பதற்கும், இரண்டாவது விலை கூறுபவர் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை பெற்றுக்கொள்வதற்கும் தற்போது சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்கின்ற நிறுவனத்திடம் மீண்டும் விலை கோரப்பட்டு பொருத்தமான வழங்குநரை தெரிவு செய்கின்ற வரை சேவையை பேணிச் செல்வதற்கும், பெறுகை குழு தீர்மானித்திருந்தது. எவ்வாறாயினும் சிற்றுண்டிச்சாலையின் பொருட்டு வருடம் இறுதி வரை வழங்குநரை தெரிவு செய்வதற்கு அமைச்சிற்கு ஆற்றல் கிடைக்கப்பெறவில்லை.

2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைப்பாடுகள் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டன.

(அ) வாகனங்களின் உபயோகம்

திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சிற்குரியதாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 47 வாகனங்கள் இருந்ததுடன். குறித்த வாகனங்களின் உபயோகம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டன.

(i) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வாகனங்களை பழுதுபார்த்தல் தொடர்பாக பெறுகைகளின் பொருட்டு கிடைக்கப்பெறும் விலை கேள்விகளை பெறுகை குழுவிடம் சமர்ப்பிக்காது விடய பொறுப்பு அலுவலரால் விலை கேள்விகளை திறக்கப்பட்டு, தொழில்நுட்ப அலுவலரிடம் அனுப்பி வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. தொழில்நுட்ப அலுவலரின் பரிந்துரைக்கமைவாக வழங்குநரை தெரிவு செய்து அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்படி அமைச்சில் வாகனங்களின் பழுதுபார்த்தல் தொடர்பாக பலவீனமான உள்ளக கட்டுப்பாடுகள் நிலவியதாக அவதானிக்கப்படுகிறது.

(ii) கௌரவ அமைச்சர் அவர்களின் ஊடகச் செயலாளர் அவர்களால் பயன்படுத்திய மோட்டார் வண்டியை பழுதுபார்ப்பதற்கு மேற்கொண்ட கோரிக்கைபடி உள்நாட்டு முகவர் நிறுவனம் ரூபா. 755,072 ஆன மதிப்பீடு சமர்ப்பித்திருப்பினும்,.'.8 அவ்வாறான பழுதுபார்த்தல் மேற்கொள்வதற்கு காரணமாகிய விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதனடிப்படையில் வண்டியை பழுதுபார்ப்பதற்காக 2013 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்டு பழுதுபார்த்திருப்பினும் இதுவரை இரசீது செலுத்தப்பட்டிருக்கவில்லை. மீண்டும் 2014 ஆம் ஆண்டு சனவரி 20 ஆந் திகதி வாகனம் இயங்காமை காரணமாக பழுதுபார்ப்பதற்கு மீண்டும் மேற்படி நிறுவனத்திடம் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆந் திகதி அனுப்பியிருந்ததுடன், பழுதுபார்ப்பதற்காக ரூபா. 620,789 ஆன மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த பழுதபார்த்தல்கள் மேற்கொள்ளப்படவில்லையென்பதுடன், 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த வண்டி பழுதுபார்க்கப்படாது மேற்படி நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2008 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த 4.9 மில்லியன் ரூபாவிலான இந்த வாகனம் தற்போது 04 ஆண்டுகள் ஓட்டமின்றி பயனற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன். வாகனத்தை கொண்டுவருவதற்கோ பழுதுபார்ப்பதற்கோ இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(iii)எரிபொருட் செலவழிவை பரிசோதனை செய்யாமை

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 29 ஆந் திகதிய 30/16 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் 3.1 பிரிவு பிரகாரம் அமைச்சிற்குரிய 47 வாகனங்கள் தொடர்பாக மீளாய்விற்கான ஆண்டில் எரிபொருட் செலவழிவை பரிசோதனை செய்யப்படவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 ஆந் திகதிய மற்றும் 02/2017 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை பிரகாரம், அதிவேக வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின்

பொருட்டு கட்டணங்களை மீளளிப்புச் செய்வதற்கென்றால், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். ஆயினும் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் அமைச்சர் அவர்களின் கடமைகளின் பொருட்டு அதிவேக வீதியில் பயணம் செய்தமைக்காக மீளாய்விற்கான ஆண்டில் மீளளிப்புச் செய்த ரூபா. 81,150 ஆன கட்டணம் தொடர்பாக முன் அனுமதி பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(இ) இணைக்கப்பட்ட மற்றும் குழாத்தின் வாகனங்களை உபயோகித்தல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதிய, சீஏ/1/17/1 இலக்க சனாதிபதி சுற்றறிக்கை பிரகாரம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோரின் உபயோகத்திற்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் பொருட்டும் இணைக்கப்பட முடியுமான ஆகக்கூடிய உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 03 ஆயினும் (மோட்டார் வண்டி/ ஜிப்/ டபல் கெப்) திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் அமைச்சின் பிரதி அமைச்சர் பொருட்டு 04 வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்தன.

(ii) 2017 மார்ச் 24 ஆந் திகதி ரூபா. 39,283,600 பெறுமதிக்கு இராஜாங்க அமைச்சர் அவர்களின் பொருட்டு கொள்வனவு செய்திருந்த மோட்டார் வண்டியை கொள்வனவு செய்வதற்கான நிபந்தனைகளின் பிரகாரம், இராஜாங்க அமைச்சர் அப்போது பயன்படுத்திய மோட்டார் வண்டியை நிதி அமைச்சிடம் மீண்டும் கையளிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும் இராஜாங்க அமைச்சர் வேறு அமைச்சிற்கு செல்கையில் அவ்விரண்டு வாகனங்களையும் கொண்டுச் சென்றுள்ளதுடன், அமைச்சின் பெயரிலுள்ள மேற்படி வாகனங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(iii) 2010 ஏப்பிரல் 29 ஆந் திகதிய 146 ஆம் இலக்க வரவு செலவு சுற்றறிக்கை பிரகாரம் புதிய அமைச்சரவை நியமனம் செய்வதற்கு முன்னர் நிலவிய அமைச்சுகளில் எல்லா அமைச்சர்கள்∴ பிரதி அமைச்சர்களின் பதவியணியிடம் வழங்கப்பட்டிருந்த எல்லா வாகனங்களையும் மீண்டும் சம்பந்தப்பட்ட அமைச்சிடம் கையளிக்கப்பட வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டு மே மாதம் மேற்கொண்ட அமைச்சரவை திருத்தங்களின் பின்னர் அமைச்சர் அவர்களின் பதவியணியிடம் வழங்கியிருந்த 04 வாகனங்களை அமைச்சிடம் இதுவரை கையளிக்கப்படவில்லை.

(ஈ) வாகனங்களை அகற்றல்

---

திறைசேரி செயலாளரது 2015 மார்ச் 31 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கையில் 07 ஆவது பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு நி.ஒ.வி.756(4) பிரகாரம், அமைச்சிற்குரிய பழுதுபார்க்க வேண்டிய நிலையில் இருக்கும் மற்றும் பயன்பாடின்றி அகற்றப்பட வேண்டுய நிலையில் உள்ள 06 வாகனங்கள் தொடர்பில் மீளாய்வு சபை நியமனம் செய்து, அகற்றப்படுவதற்கு பொருத்தமான வாகனங்களை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயினும், கணக்காய்வு திகதியான 2018 ஆம் ஆண்டு ஏப்பிரல் 20 ஆந் திகதி வரை தேவையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. இது தொடர்பாக 2018 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க நிதி மற்றும் வெகுசன ஊடக

அமைச்சின் அரசாங்கத்தின் நிதியல்லாத சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(உ) 2015 மார்ச் 31 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை பிரகாரம், நிதி குத்தகை முறையின்கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களை தேசிய வரவு செலவு திணைக்களத்தின் முன் அனுமதியின்றி ஏனைய நிறுவனங்களிடம் மாற்ற முடியாதாயினும், அவ்வாறான அனுமதியின்றி குத்தகை முறையின்கீழ் கையேற்கப்பட்டிருந்த 03 வாகனங்களை அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்களால் அமைச்சரவை திருத்தங்களின் பின்னர் புதிய அமைச்சுகளுக்கு கொண்டுச் செல்லப்பட்டிருந்தது.

(ஊ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்

---

1996-2012 ஆண்டுகள் தொடக்கம் அமைச்சில் பயன்படுத்திய பல்வேறு நிறுவனங்களுக்குரிய 04 வாகனங்களை இதுவரை அமைச்சிடம் கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. 2017 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற பிரதி அமைச்சர் கொண்டு வந்த இரண்டு அமைச்சுகளுக்குரிய 08 வாகனங்களை கையேற்பதற்கு இதுவரை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(எ) வெளியக தரப்புகளிடம் வழங்கப்பட்டிருந்த சொத்துக்கள்

---

அமைச்சிற்குரிய 20 வாகனங்களை முறையற்ற வகையில் வெளியக தரப்புகளிடம் விடுவிக்கப்பட்டிருந்தது.

2.6 பாரப்படுத்தல்களும் பொறுப்புகளும்

---

நிதி ஒழுங்குவிதி 94 (i) பிரிவிற்கு முரணாக அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளை விஞ்சி பொறுப்புகளை மேற்கொள்ளுதல் காரணமாக 13 செலவு விடயங்களுக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா. 2,327,004 ஆன ஒதுக்கீடுகளை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது.

2.7 நிதி முறைகேடுகள் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்

---

(அ) மீளாய்விற்கான ஆண்டில் வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக அமைச்சினால் ரூபா. 5,228,398 ஆன தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 2006 ஆம் ஆண்டு சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையில் 3.4 பந்தி பிரகாரமும், பெறுகை கைந்நூலில் 2.14.1 பந்தி பிரகாரமும், வேலைகள் மற்றும் சேவைகளுக்கான பெறுகை செயற்பாட்டினை போட்டியுடன்கூடிய வகையில் பொருத்தமான வழங்குநரை தெரிவு செய்ய வேண்டுமாயினும், அமைச்சின் வாகனங்களை பழுதுபார்த்தல் தொடர்பில் அவ்வாறு பணியாற்றப்படாமை அவதானிக்கப்பட்டது. பெறுமதியில் கூடிய பழுதுபார்த்தல்களை மாதிரியாக கொண்டு மேற்கொண்ட மேலதிக பரிசோதனையில், பழுதுபார்த்தல்களின் பொருட்டு அமைச்சினால் பெறுகை நடவடிக்கைகளின்போது பயன்படுத்திய விலை கேள்விகளுக்கு ஏற்புடையதான 02 நிறுவனங்களும் விலை கணக்கு சமர்ப்பிக்கப்படவில்லையென கணக்காய்வில் அறியப்பட்டது. அதனடிப்படையில் குறித்த நிறுவனங்களில் கடித தலைப்புகளின்படி தயாரிக்கப்பட்ட விலை கேள்விகளை பயன்படுத்தி 05 சந்தர்ப்பங்களில் ரூபா 1,124,199 ஆன பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்ததாக கணக்காய்வில் அறியப்பட்டது.

(ஆ) 2017 ஆம் ஆண்டு 10 ஆந் திகதிய கௌரவ பிரதி அமைச்சர் அவர்களின் ஊடகச் செயலாளரிடம் இணைக்கப்பட்ட வாகனம் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், அதன் பழுதுபார்த்தலுக்கு முகவர் நிறுவனத்தால் மதிப்பிடப்பட்ட தொகை ரூபா. 5,076,860 ஆதல் காரணமாக விலை கணக்கின் பொருட்டு காப்புறுதி கம்பெனி இணக்கம் தெரிவிக்கவில்லையென்பதுடன், 04 நிறுவனங்களில் விலை கேள்விகள் மேற்கொண்டதற்கான தகவல்கல் கடிதக்கோவையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதில் ஒரு நிறுவனம் வாகனத்தின் பழுதுபார்த்தலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிறுவனத்துடன் இணைந்த நிறுவனமென கணக்காய்வில் அறியவந்தது. மேலும் 02 நிறுவனங்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட விலை கேள்விகள், போலியாக தயாரிகக்ப்பட்ட விலை கேள்விகள் என்றும் அறிய வந்தது. எவ்வாறாயினும், ரூபா. 1,388,225 ஆன தொகை வாகனத்தின் பழுதுபார்த்தலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், பெறுகை நடவடிக்கைகள் போட்டித் தன்மையுடன் மேற்கொள்ளப்படாமை 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு முரணாக செயற்படுதல் என்று அவதானிக்கப்பட்டது. அதனடிப்படையில் பெறுகை நடவடிக்கைகளின் ஊடாக ஆகக்கூடிய பொருளாதார நன்மைகளை பெற்றுக்கொள்வதற்கும், தகைமைகளைக் கொண்டுள்ள தரப்புகளுக்கு நியாயமான, சமமான மற்றும் ஆகக்கூடிய வாய்ப்புகளை வழங்குவதற்கும் அமைச்சு தவறவிட்டிருந்தது. இதன் காரணமாக பெறுகை செயற்பாடுகளின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லையென்பதுடன், வாகனங்களின் பழுதுபார்த்தல்கள் தொடர்பாக முறையான உள்ளக கட்டுப்பாடு இல்லாமை காரணமாக இவ்வாறான முறைகேடுகள் ஏற்பட்டிருந்ததாக கணக்காய்வின்போது மேலும் அவதானிக்கப்பட்டது.

2.8 நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ளாமை

---

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 அந் திகதிய மற்றும் என்பீ/எஸ்பீ.்.எஸ்டீஜீ/17 ஆம் இலக்க நிலைபேறுடனான அபிவிருத்தி தொடர்பாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட கடிதமும், நிலைபேறுடனான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' பிரகாரமும் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தாலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக அமைச்சு தமது விடயவெல்லைக்குள் வருகின்ற விடயங்கள் தொடர்பாக, அடையாளம் காணப்பட்ட நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துக்கொள்வதற்கான சுட்டிகள், திருப்புமுனைகள் மற்றும் இலக்குகளை அடைந்துக்கொள்வதனை அளவிடுவதற்கான சுட்டிகளையும் அடையாளம்காணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று அமைச்சு நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கமாக இணைந்த மற்றும் சமத்துவத்துடனான தரத்துடன்கூடிய கல்வியினை உறுதிப்படுத்தி '' அனைவருக்கும் வாழ் நாள் முழுவதும் கற்கை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்'' அடையாளம் காணப்பட்டிருப்பினும், குறித்த நோக்கம் நிறைவேற்றுகின்ற வகையில் ஆண்டில் கருத்திட்டங்களை திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

2.9 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் அளிக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தல்

---

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் 05 ஆண்டு காலப் பகுதிக்குள் அமைச்சிற்கு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகள், உபயோகம் மற்றும் மீதி தொகை தொடர்பான தகவல்களும் கணக்காய்வு அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவு வகை | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | மீதி | மீதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| ------ | ------------- | ----------- | --------- | ------- | --------------- |
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருஞ் | 2,878.83 | 2,719.57 | 159.26 | 5.53 |
| | மூலதனம் | 4,343.70 | 2,059.45 | 2,284.25 | 52.59 |
| | மொத்தம் | 7,222.53 | 4,779.02 | 2,443.51 | 33.83 |
| 2014 | மீண்டுவருஞ் | 3,801.12 | 3,769.19 | 31.93 | 0.84 |
| | மூலதனம் | 4,737.30 | 3,772.40 | 964.90 | 20.37 |
| | மொத்தம் | 8,538.42 | 7,541.59 | 996.83 | 11.67 |
| 2015 | மீண்டுவருஞ் | 2,889.49 | 2,849.06 | 40.43 | 1.40 |
| | மூலதனம் | 5,909.22 | 3,599.08 | 2,310.14 | 39.09 |
| | மொத்தம் | 8,798.71 | 6,448.14 | 2,350.57 | 26.71 |
| 2016 | மீண்டுவருஞ் | 3,678.25 | 3,412.71 | 265.54 | 7.22 |
| | மூலதனம் | 7,421.85 | 4,526.32 | 2,895.53 | 39.01 |
| | மொத்தம் | 11,100.10 | 7,939.03 | 3,161.07 | 28.48 |
| 2017 | மீண்டுவருஞ் | 4,570.51 | 3,926.66 | 643.85 | 14.09 |
| | மூலதனம் | 3,910.53 | 2,298.41 | 1,612.12 | 41.23 |
| | மொத்தம் | 8,481.04 | 6,225.07 | 2,255.97 | 26.60 |

(அ) ஒதுக்கீட்டுக் கணக்கு

---------------------------

(ஹ) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை

------------------------------------------------------------------------------

(ய) மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக மொத்த தேறிய ஒதுக்கீடு ரூபா. 8,481,043,600 ஆவதுடன், அதில் ரூபா. 6,225,071,146 ஆண்டில் செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தேறிய ஒதுக்கீட்டில் மீதி தொகை நூற்றுக்கு 27 ஆவதுடன், நூற்றுக்கு 41 ஆன மூலதன ஒதுக்கீட்டில் மீதி தொகை அதற்கு பிரதான காணரமாக அமைந்துள்ளது.

(டி) 2017 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின்கீழ் மாத்தறை ஜெர்மன் பயிற்சி பாடசாலை மற்றும் ஹோட்டல் பாடசாலை மேம்படுத்துவதற்காக செலவு விடய இலக்கம் 197-02-03-37-2104 இற்காக குறைநிரப்பு மதிப்பீடுகள்மூலம் ரூபா .200,000,000 ஆன ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருப்பினும், அமைச்சரவை மறுசீரமைப்பின் பின்னர் அந்த ஒதுக்கீடுகள் கிளிநொச்சியில், இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் விடுதியினை நிருமாணிப்பதற்கு பயன்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஆண்டுக்குள் நிருமாணிப்பு

பணிகளை மேற்கொள்ளப்படாமையால் மொத்த தொகையும் எஞ்சியிருந்தது.

(உ) செலவு விடயங்கள் 02 இன்கீழ் ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா. 300,250,000 அன ஒதுக்கீடுகளைக்கொண்டு இயந்திரங்கள் மற்றும் பொறி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 250இ000 ஆன தொகையில் நூற்றுக்கு 70 இற்கு அதிகமான தொகை எஞ்சியிருந்ததுடன், முறையான திட்டமின்றி நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக 2017 ஆம் ஆண்டில் வரவு செலவு திட்டத்தின்கீழ் ஆடைகள், சுகாதாரம், காப்புறுதி, விருந்தினர் உபசரணை மற்றும் நிருமாணிப்புகள் போன்ற துறைகளில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு படி செலுத்தல் பொருட்டு குறைநிரப்பு மதிப்பீடுகள்மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடுகளிலிருந்து 26.8 மில்லியன் ரூபா மட்டும் செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் ஒதுக்கீட்டுத் தொகையில் 273.2 மில்லியன் ரூபா தொகை அதாவது நூற்றுக்கு 91 ஐ அப் பணியின் பொருட்டு பயன்படுத்துவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

2.10 2104 செலவு விடயத்தின்கீழ் ஏற்பாடு செய்திருந்த 820 மில்லியன் ரூபாவிலான மூலதன ஒதுக்கீடுகளிலிருந்து 535 மில்லியன் ரூபா அதாவது நூற்றுக்கு 65 ஐ பயன்படுத்தியிருக்கவில்லை.

2.11 அரசாங்க அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு

பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்கு ஏற்புடையதாக விடய இலக்கம் 19701 இன்கீழ் அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உண்மையான பெறுமதிகளும் பின்வருமாறாகும் .

| செலவு | | கிடைக்கப்பெறுதல் | | பற்று மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உண்மையான | ஆகக் குறைந்த எல்லை | உண்மையன | ஆகக் கூடிய எல்லை | உண்மையான |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 28.0 | 22.9 | 10.0 | 15.6 | 80.0 | 52.5 |

(அ) நிலுவை கடன் மீதி அறவிடப்படாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கணக்கிணக்கக் கூற்று பிரகாரம் அன்றைய திகதியில் அறவிட வேண்டியிருந்த நிலுவை மீதிகளின் மொத்தம் ரூபா. 415,750 ஆவதுடன், குறித்த நிலுவை மீதி ஐந்து ஆண்டு காலப் பகுதியிலிருந்து இருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

2.12 பொது வைப்புக் கணக்கு

-------------------------------

அமைச்சின் கீழ் உள்ள 02 பொது வைப்புக் கணக்குகளில் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் மீதியின் மொத்தம் 38.9 மில்லியன் ரூபாவாகும். அதில் 02 ஆண்டுகள் கடந்த பின்னர் மொத்தம் 23.66 மில்லியன் ரூபாவிலான வைப்புகள் 36 தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

2.13 ஆவணப் பதிவேடுகள், மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

----------------------------------------------------------

அமைச்சினால் பின் குறிப்பிடப்படும் ஆவணங்கள் பேணப்படவில்லையென்பதுடன். சில ஆவணங்களை முறையாகவும், இற்றைப்படுத்தியும் பேணப்படவில்லையென மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

| ஆவணங்களின் வகை | ஏற்புடைய ஒழுங்குவிதிகள் | அவதானிப்புகள் |
|---|---|---|
| சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 110 | பேணப்படவில்லை |
| வாகன லொக் புத்தகம் | நிதி ஒழுங்குவிதி 1645(அ) | இற்றைப்படுத்தப்படவில்லை |
| லீவு தொடர்பான பதிவேடு | தாபன விதிக் கோவையில் ஒனை அத்தியாயத்தில் 1.7 | இற்றைப்படுத்தப்படவில்லை |
| ஓட்டக் குறிப்பு புத்தகம் | நிதி ஒழுங்குவிதி 1645 | முறையாக பேணப்படவில்லை |
| வாகனங்கள் தொடர்பான குறிப்புகள் | 2016 ஆம் அண்டு திசெம்பர் 29 அந் திகதிய 30/2016 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் 3.3 பிரிவு | பேணப்படவில்லை |

2.14 இணங்கியெழுகாமை

--------------------------

2.14.1 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியெழுகாமை

----------------------------------------------------------------------------------------------------------------------

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாத சந்தர்ப்பங்களை பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் | பெறுமதி | இணங்கியெழுகாமை |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை<br>நிதி ஒழுங்குவிதி 104 (3) | - | அரசாங்க சொத்துகளுக்கு நிகழ்ந்த சேதங்கள் தொடர்பாக பரிபூரண அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு அதிகமான நாட்கள் தாமதமாகின்றதென கருதுவதாயின், ஆரம்ப அறிக்கை சமர்ப்பிப்பதற்கு உடனடியாக பணியாற்றப்பட வேண்டுமாயினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 04 சந்தர்ப்பங்களில் அமைச்சு அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | | |
| 2017 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆந் திகதிய 22/99 (ஓஓஓஐஐஐ) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | | குழு போக்குவரத்து வசதிகளின் பொருட்டு பயன்படுத்தியுள்ள வாகனங்கள் இரவு நேரங்களில் நிறுத்தப்பட வேண்டிய இடங்களை நிறுவனத் தலைவரால் விதிக்கப்படும் இடமாக இருத்தல் வேண்டுமாயினும், மாதிரி பரிசோதனையில் அமைச்சின் குழு போக்குவரத்திற்காக பயன்படுத்திய இரண்டு வாகனங்கள் 04 சந்தர்ப்பங்களில் 02 ஆந் திகதி தொடக்கம் 16 அந் திகதி வரையிலான காலத்திற்கு அமைச்சு வலாகத்தில் நிறுத்தப்படவில்லையென அறிய வந்தது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30 ஆந் திகதி அதாவது கணக்காய்வு மேற்கொள்கின்ற திகதியிலும் குறித்த வாகனங்கள் பிரிதொரு இடத்தில் நிறுத்தி வைப்பதற்கான முன் அனுமதி பெற்றுக்கொள்ளவில்லையென்பதுடன். இது தொடர்பாக நி.ஒ.விதி.128 (1) (இ) மீது தங்களது கவனத்தை கோருகின்றென். |
| 2010 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 இலக்க சனாதிபதி அலுவலகத்தின் சுற்றுநிருபம் | | சுற்றுநிருபத்திற்கு முரணாக முன்னாள் அமைச்சர் அவர்களுக்கு 04 தொலைபேசிகள் வழங்கப்பட்டிருந்தன. அதனடிப்படையில் சுற்றுநிருபத்தின் எல்லைகளை கடந்து நிலையான மூன்று தொலைபேசிகளுக்கு மாதாந்த மற்றும் நிலையான கட்டணங்களின் பொருட்டு மேலதிக செலவு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டிருந்தது. |

2.14.2 வரி தேவைகளுக்கு ஒழுங்கமையாமை

---

உழைக்கும்போது வரி செலுத்தல் பரிசோதனை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதிய ளுநுஊ/2015/04 ஆம் இலக்க இறைவரித் திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம், உழைக்கும்போது செலுத்தும் வரியாக அலுவலர்களிடத்தில் மாதாந்தம் அறவிடப்படும் தொகையை அடுத்து வரும் மாதத்தில் 15 ஆந் திகதிக்கு முன்னர் இறைவரித் திணைக்களத்திடம் அனுப்பி வைக்க வேண்டுமாயினும் அவ்வாறு பணியாற்றப்படவில்லை.

(ii) மேற்படி சுற்றுநிருபம் பிரகாரம் போக்குவரத்து படி பெறுகின்ற அலுவலர்களிடத்தில் ரூபா. 50,000 வரை மட்டும் உழைக்கும்போது செலுத்தும் வரியிலிருந்து விடுவிக்க முடியுமென்பதுடன். ஏனைய அனைத்து படிகளும் வரிக்கு உட்படுகின்றது. எவ்வாறாயினும் அமைச்சு மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு தொலைபேசி மற்றும் எரிபொருள் படிகளுக்கு உழைக்கும்போது வரி அறவிடுவதனை ஏற்புடையதாக கொண்டிருந்தது.

2.15 உள்ளக கணக்காய்வு

---

(அ) மீளாய்விற்கான ஆண்டுக்கு அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டம்படி 10 நிறுவனங்களுக்கு ஏற்புடையதாக அடையாளம் காணப்பட்ட 22 கணக்காய்வு துறைகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் 05 விசேட புலனாய்வுகள் அடங்கலாக 12 உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை மட்டும் வழங்கப்பட்டிருந்தது.

(இ) அமைச்சு மற்றும் அதன்கீழ் உள்ள நிறுவனங்களில் இலக்குகளை அடைந்துக்கொள்ளுதல், செயலாற்றுகை, கணக்கீடுகள், நிதி மற்றும் தொழிற்பாட்டு பிரிவுகளில் உள்ளக கட்டுப்பாட்டு மதிப்பீடுகள் போன்ற துறைகள் உள்ளடங்கும் வகையில் போதியளவிலான உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை-யென்பதுடன், உள்ளக கணக்காய்வினை, முகாமைத்துவ கட்டுப்பாட்டு காரணியாக பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தியிருக்கவில்லை.

2.16 மனித வளங்களின் முகாமைத்துவம்

---

2.16.1 இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளுக்கான செலவினம்

---

மேற்படி 2.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான வெற்றிடங்கள் மற்றும் மேலதிக பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு அமைச்சினால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவின தொகுதி பொருட்டு 255 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தனி நபர் செலவினமாக 578,896 &பா செலவிடப்பட்டிருந்தது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | உண்மையான அலுவலர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக அலுவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | - சிரேட்ட மட்டம் | 26 | 20 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 03 | 02 | 01 | - |
| (iii) | இடைநிலை மட்டம் | 435 | 374 | 61 | - |
| (iv) | ஏனைய மட்டங்கள் | 44 | 43 | 01 | - |
| (v) | தற்காலிகம் | 04 | 01 | 03 | - |
| | | -------- | -------- | -------- | ------- |
| | மொத்தம் | 512 | 440 | 72 | 01 |
| | | ==== | ===== | ==== | === |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்யபடாமை

---------------------------------------------------------------------------------

இயல்பான சேவை மட்டத்தினை பேணிச்செல்வதற்கு, ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பாக காலத்திற்கேற்றவாறான மீளாய்வினை மேற்கொள்ளப்படாமை காரணமாக, மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் சிரேட்ட மட்டத்தின் 06 வெற்றிடங்களும், மூன்றாம் நிலை மட்டத்தில் 01 வெற்றிடமும், இடை நிலை மட்டத்தில் 61 வெற்றிடங்களும் ஏனைய மற்றும் தற்காலிக மட்டத்தில் 04 வெற்றிடங்களும் என்ற வகையில் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சில் 72 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) ஏனைய தரப்புகளிடம் விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

-------------------------------------------------------------------------------

(i) பிரதி அமைச்சர் அவர்களின் பதவியணிக்காக 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி தொடக்கம் அபிவிருத்தி அலுவலர் ஒருவர் மற்றும் இணைந்த சேவையில் பதவிகளை வகிக்கும் 06 அலுவலர்கள் அடங்கலாக 07 அலுவலர்களை விடுவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் அந்த அலுவலர்களின் சம்பளம் மற்றும் வேதனங்களாக ஆண்டில் அமைச்சினால் 1,427,210 ரூபா தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ii) 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் 11 ஆந் திகதி தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையின் அலுவலர் ஒருவரையும் பிரதி அமைச்சர் அவர்களின் பதவியணியிடம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிறுவனத்தில் மேற்படி அலுவலரின் பொருட்டு சம்பளம் மற்றும் வேதனமாக 144,634 ரூபா தொகை செலுத்தப்பட்டிருந்தது.